வி.பி.சிங் பிறந்த தினம்: முதல்வர் ஸ்டாலின் புகழாரம்

சென்னை, ஜூன் 25: முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பிறந்த நாளையொட்டி அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டினார்.

முன்னதாக, சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள அவரது சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த உருவப்படத்துக்கு மலர் தூவி முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

சமூக வலைதளத்தில் வி.பி.சிங் நினைவைப் போற்றி, முதல்வர் வெளியிட்ட பதிவு: உத்தர பிரதேசத்தில் பிறந்திருந்தாலும் ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான தலைவர்– சமூகநீதிக் காவலர் வி.பி.சிங். சமூகநீதி பயணத்தின் வெற்றியில் அவர் என்றும் வாழ்வார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

மரியாதை...

முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் 94– ஆவது பிறந்த நாளையொட்டி சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு கீழே வைக்கப்பட்டிருந்த உருவப் படத்துக்கு செவ்வாய்க்கிழமை மரியாதை செலுத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா உள்ளிட்டோர்.

தமிழக மீனவர்கள் உள்பட 10 பேர் இலங்கை கடற்படையினரால் கைது

மீனவர்கள் மீது கொலை வழக்கு; படகு பறிமுதல்

நாகப்பட்டினம், ஜூன் 25: எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி, தமிழக மீனவர்கள் உள்பட 10 பேரை இலங்கை கடற்படையினர் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர். இந்த கைது நடவடிக்கையின் போது இலங்கை கடற்படை வீரர் கடலில் தவறி விழுந்து உயிரிழந்ததால், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம், அக்கரைப்பேட்டை மீனவ கிராமம் திடீர்குப்பத்தைச் சேர்ந்த வெற்றிவேல் மகன் ஆனந்தன் (52) என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் 10 மீனவர்கள், அக்கரைப்பேட்டை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த ஜூன் 21–ஆம் தேதி அதிகாலை மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். செவ்வாய்க்கிழமை அதிகாலை கோடியக்கரைக்கு கிழக்கே சுமார் 40 கடல் மைல் தொலைவில் அவர்கள் மீன் பிடித்து கொண்டிருந்தனராம். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி மீனவர்கள் 10 பேரையும் கைது செய்து காங்கேசன் துறைமுகத்துக்கு கொண்டு சென்றனர்.

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு.

இலங்கை கடற்படையினரால் உயிரிழப்பு: இந்த கைது நடவடிக்கையின்போது, இலங்கை கடற்படை வீரர் ஒருவர் கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார்.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட மீனவர்களான அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த மதி (38), ராஜேஷ் (35), முத்துசெட்டி (70), கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி (60), டாடா நகரைச் சேர்ந்த சுப்பிரமணியன் (65), மயிலாடுதுறை மாவட்டம், வானவன் மகாதேவியைச் சேர்ந்த வைத்தியநாதன் (45), கலைமுருகன் (22), கடலூரைச் சேர்ந்த மணிபாலன் (55), ஆந்திர மாநிலத்தைச் சேரந்த கங்கால கொருலையா, ஐயோஜி வெங்கட் ஆகிய 10 பேர் மீதும் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீனவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல் அவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு, மீனவர்கள் மீதான பொய் வழக்கை ரத்து செய்து, அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகை மீட்கவும் நடவடிக்கை எடுக்க அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும், மீனவ பஞ்சாயத்தாரும், மீனவர் சங்கங்களும் இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள்.

மீனவர்களை மீட்க நடவடிக்கை தேவை: மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜூன், 25: இலங்கை சிறையிலுள்ள 47 தமிழக மீனவர்கள், 166 மீன்பிடிப் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு அவர் செவ்வாய்க்கிழமை எழுதிய கடிதம்:

விசைப் படகில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் உள்பட 10 பேர் இலங்கைக் கடற்படையினரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை இலங்கைக் கடற்படையினரால் 203 மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டு, 27 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் இது போன்று அடிக்கடி கைது செய்யப்படுவது, தமிழ்நாட்டின் மீனவ சமுதாயத்தினரிடையே ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இந்த விஷயத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் உடனடியாகத் தலையிட்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்க வேண்டும்.

தற்போது, இலங்கை வசமுள்ள 47 மீனவர்களையும், 166 மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க, கூட்டு பணிக்குழு கூட்டத்தைக் கூட்டத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சநாதனம் குறித்த சர்ச்சை பேச்சு விவகாரம்: அமைச்சர் உதயநிதிக்கு ஜாமீன்

பெங்களூரு, ஜூன் 25: சநாதன தர்மத்துக்கு எதிராக சர்ச்சை கருத்து தெரிவித்ததற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ஆஜரானார். அவருக்கு சிறப்பு நீதிமன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற சநாதன எதிர்ப்பு மாநாட்டில் பங்கேற்று பேசிய விளையாட்டு, இளைஞர் நலத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சநாதன தர்மத்துக்கு எதிரான கருத்துகளைக் கூறினார். இதற்கு பாஜக உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன.

உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக குற்றவியல் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கக் கோரி, பெங்களூரு நகரில் உள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் 2024 பிப்ரவரி மாதம் சமூக ஆர்வலர் பரமேஷ் என்பவர் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட சிறப்பு நீதிமன்றம், உதயநிதி ஸ்டாலின் உள்பட அந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்த வெங்கடேஷ், ஆதவன், மதுக்கூர் ராமலிங்கம் ஆகிய 4 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டது. நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு கால அவகாசம் அளிக்கக் கோரி 4 பேர் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், இந்த மனுவுக்கு எதிராக தடை கோரி கர்நாடக உயர்நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனு நீதிபதி கிருஷ்ணா எஸ். தீக்ஷித் முன் ஜூன் 21–ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக குற்றவியல் வழக்குப் பதிவு செய்ய தடை விதித்து உத்தரவிட்டார். மேலும், இந்த விவகாரத்தில் மனுதாரர் தரப்பில் பதில் மனுவை விரைவில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.

இதனிடையே, இந்த வழக்கை விசாரித்து வரும் மக்கள் பிரதிநிதிகளுக்கான சிறப்பு நீதிமன்றம் (42–ஆவது கூடுதல் முதன்மை மாநகர மேஜிஸ்திரேட்) விசாரணையின்போது நேரில் ஆஜராகுமாறு உதயநிதி ஸ்டாலினுக்கு 2–ஆவது நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

இதைத் தொடர்ந்து, பெங்களூரில் செவ்வாய்க்கிழமை நடந்த விசாரணையின்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பு நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார். ரூ. 1 லட்சம் பிணைத் தொகையின் அடிப்படையில், இந்த வழக்கில் உதயநிதி ஸ்டாலினுக்கு ஜாமீன் வழங்கி சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தாயிடம் தகராறு செய்த மகன் கொலை: தந்தை கைது

நீடாமங்கலம், ஜூன் 25: திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அருகே தாயிடம் தகராறு செய்த மகனை கொலை செய்த தந்தை செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

நார்த்தாங்குடியைச் சேர்ந்தவர் விவசாயி சீனிவாசன் (60). இவருக்கு, 2 மகன்கள். இளைய மகன் கார்த்தி கும்பகோணத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் எலக்ட்ரீஷியனாக வேலை செய்து வந்தார். கார்த்திக்கு நந்தினி என்ற மனைவியும், மகளும் உள்ளனர்.

இந்நிலையில், கார்த்தி குடிபோதையில் வீட்டில் தகராறு செய்ததால் கடந்த ஒன்னறை ஆண்டுகளுக்கு முன்பு நந்தினி தனது தந்தை வீட்டுக்கு சென்றுவிட்டார். இதன் காரணமாக கார்த்தி தந்தை சீனிவாசனிடம் அவ்வபோது குடிபோதையில் தகராறு செய்வாராம். செவ்வாய்க்கிழமை வழக்கம்போல அதிக குடிபோதையில் கார்த்தி தனது தாயிடம் தகராறு செய்து, அவரை அரிவாளால் தாக்க முயன்றாராம். அப்போது, சீனிவாசன் இரும்பு கம்பியால் தாக்கியதில் கார்த்தி சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

வலங்கைமான் போலீஸார் கார்த்தி சடலத்தை மீட்டு மன்னார்குடி அரசுமருத்துவமனைக்கு அனுப்பிவைத்து, விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

செந்தில் பாலாஜி நீதிமன்றக் காவல் ஜூலை 1 வரை நீட்டிப்பு

சென்னை, ஜூன் 25: சட்ட விரோத பணப் பரிமாற்ற தடை சட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவலை ஜூலை 1–ஆம் தேதி வரை நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்ட விரோத பணப் பரிமாற்ற தடை சட்ட வழக்கில் கடந்த 2023 ஜூன் 14–ஆம் தேதி செந்தில் பாலாஜி அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டார். அவரது ஜாமீன் மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றமும், சென்னை உயர் நீதிமன்றமும் தள்ளுபடி செய்துள்ளன.

தற்போது செந்தில் பாலாஜி ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவல் செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்தது.

இதைத் தொடர்ந்து அவர் புழல் சிறையிலிருந்து காணொலி மூலம் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி முன்பாக ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது, செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவலை, ஜூலை 1–ஆம் தேதி வரை நீட்டித்து நீதிபதி அல்லி உத்தரவிட்டார்.

41–ஆவது முறையாக செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், அமலாக்கத் துறை வழக்கில் இருந்து விடுவிக்க கோரிய மனு மீதான உத்தரவை ஒத்திவைக்க கோரி செந்தில் பாலாஜி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட புதிய மனுக்கள் மீதான விசாரணையையும் ஜூலை 1–ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

சாயல்குடி அருகே மரத்தில் கார் மோதி விபத்து: 2 குழந்தைகள் உள்பட மூவர் உயிரிழப்பு

கமுதி, ஜூன் 25: சாயல்குடி அருகே பனை மரத்தில் கார் மோதியதில் 2 குழந்தைகள் உள்பட மூவர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம் வளையர் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த முகம்மதுமாலிக் (34). இவர் தனது மனைவி அகம்மதுநிஷா (26), குழந்தைகள் அஸ்ரின்பாத்திமா (5), அப்ரீன்பாத்திமா (3), 6 மாதக் குழந்தை சீனிபர்ஹான், மாமியார் பரிதாபீவி (59) ஆகியோருடன் குற்றாலத்துக்கு காரில் சென்றார். பின்னர், அவர் அங்கிருந்து செவ்வாய்க்கிழமை மாலை காரில் குடும்பத்தினருடன் வாலிநோக்கம் திரும்பினார்.

இந்த நிலையில், நரிப்பையூர் அருகே கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையோரத்தில் இருந்த பனை மரத்தில் மோதியது. இதில் பலத்த காயமடைந்த பரிதாபீவி, குழந்தைகள் அப்ரீன்பாத்திமா, சீனிபர்ஹான் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இது குறித்து தகலறிந்து அங்கு சென்ற சாயல்குடி தீயணைப்பு மீட்புக் குழுவினர், போலீஸார் காரை உடைத்து பலத்த காயமடைந்த நிலையில் இருந்த முகம்மதுமாலிக், அகமதுநிஷா, அஸ்ரின்பாத்திமா ஆகியோரை மீட்டனர். அவர்களை சாயல்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சைக்குப் பிறகு, மூவரும் தீவிர சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது குறித்து சாயல்குடி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

நில மோசடி வழக்கில் முன்னாள் அமைச்சரின் முன்ஜாமீன் மனு தள்ளுபடி

கரூர், ஜூன் 25: நில மோசடி வழக்கில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரின் முன் ஜாமீன் மனுவை கரூர் மாவட்ட முதன்மை நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தள்ளுபடி செய்தது.

நாமக்கல்லைச் சேர்ந்த பிரகாஷ் என்பவரிடம் ரூ.100 கோடி மதிப்பிலான சொத்தை எழுதி வாங்கிய வழக்கில் தனது பெயர் சேர்க்கப்படலாம் எனக் கருதி முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் அண்மையில் கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் கோரி மனு தாக்கல்செய்தார். இந்த வழக்கை செவ்வாய்க்கிழமை விசாரித்த மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி ஆர்.சண்முகசுந்தரம் முன் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

தொலைத்தொடர்பு அமைச்சகம், அஞ்சல் துறை, சிவில் விங்

சதவிகித வீத e-ஒப்பந்தப்புள்ளி கோரலுக்கான பத்திரிக்கை அறிவிப்பு

இந்திய குடியரசுத்தலைவர் சார்பில், **செயற்பொறியாளர் (C)** போஸ்டல் சிவில் டிவிஷன் சென்னை, பின்வரும் பணிக்காக இணையவழி சதவிகித வீத (CPWD-7) e-ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

N.I.T எண்: 21/PCD/C/2024-25

பணியின் பெயர் : சென்னை நகர மத்திய கோட்டத்தின் கீழான டாக்டர் சுப்புராயநகர் ஊழியர் குடியிருப்பகத்தில் மாநாட்டு அரங்கம் & RTC அமைப்பதற்கான கட்டடப் பணிகள்

உத்தேசச் செலவு : ரூ. 3054044/-

டேவணித்தொகை : ரூ. 61081/-

முடிப்பதற்கான கால அளவு : 60 நாள்கள்

ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 04/07/2024 நாளன்று 11.00 மணி வரை.

விலைப்புள்ளி படிவங்கள் மற்றும் இதர விபரங்களை https://eprocure.gov.in/eprocure/app. என்ற இணையத்தளத்தில் இருந்து பெறலாம்.

திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து, திருநள்ளாறு.

எண்.3/TNRCP/e-Tenders/2024-25 தேதி : 25.06.2024

மின்னனு (E-Tender) குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து சார்பாக 7 வேலைகளுக்காக புதுச்சேரி பொதுப்பணித்துறையில் பதிவு செய்த தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் / நிறுவனங்களிடமிருந்து திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அவர்களால் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தம் குறித்த எண் / ஒவ்வொரு வேலைக்கும் வரையறுக்கப்பட்ட எண் ஆகியவற்றிற்கு இணையதளம் http://pudutenders.gov.in ஐ பார்க்கவும்.

முன்வைப்புத் தொகை செலுத்தவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்யக்கூடிய தேதி மற்றும் நேரம்	28.06.2024 காலை 11.00 மணி முதல்
மின்னனு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம்	10.07.2024 காலை 11.00 மணி வரை
மின்னனு ஒப்பந்தப்புள்ளி திறக்கும் தேதி மற்றும் நேரம்	10.07.2024 காலை 11.30 மணி முதல்

முன்வைப்புத்தொகை மற்றும் ஒப்பந்தப்படிவ தொகை (வரிசை எண்.5 மற்றும் 6–ல் உள்ளபடி) இணையதளம் வழியாக செலுத்தப்பட வேண்டும். மேலும் விபரங்களுக்கு **Digital Signature Certificate** உள்ள ஒப்பந்ததாரர்கள் இணையதளம் http://pudutenders.gov.in ஐ பார்க்கவும்.

ஒப்பந்தப்புள்ளி பற்றிய மேலும் விபரங்களை பெறவும், அறியவும் புதுவை தலைமை செயலகத்தின் 3வது தளத்தில் உள்ள **e-procurement Cell**-ஐ தொடர்பு கொள்ள தொலைபேசி எண்.0413–2220225 மற்றும் 1800 3070 2232 (Toll Free) Mail id : Support-eproc.pon@nic.inஐ அணுகவும்.

ஆணையர்,
திருநள்ளாறு கொம்யூன் பஞ்சாயத்து.

No.406/Dip/KKL/ADVT/2024

JM FINANCIAL

JM :.பைனான்சியல் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அடையாள எண் (CIN): U67190MH2007PLC74287

பதிவு அலுவலகம்: 7ஆவது தளம், சினெர்ஜி, அப்பாசாஹெப் மாராத்தே மார்க், பிரபாதேவி, மும்பை - 400025.

இணையதளம்: www.jmfinancialarc.com

தொடர்பு நபர்: (1) விஜய் தேவ்ராஜ் - 9843833009, (2) ரோகன் சாவந்த்- 9833143013, (3) சிந்துஜா பிள்ளை - 022-6224 1676

E-ஏல விற்பனை அறிவிப்பு - முதல் விற்பனை

அடையாள சுவாதீனத்தில் E -ஏல விற்பனை அறிவிப்பு, E -ஏல தேதி: 02.08.2024, காலை 11.00 to பிற்பகல் 2.00

கடன் குறியீடு / கிளை / கடன்தாரர்(கள்) / கவ்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	சொத்து முகவரி_இறுதியானது	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD) (குறைந்தபட்ச விலையில் 10%)	நிலுவைத் தொகை (20.06.2024)
கடன் குறியீடு எண்: 01000006215, சென்னை (கிளை), ஸ்ரீ கலைமகள் கல்வி அறக்கட்டளை (கடன்தாரர்), நெடுஞ்செழியன் கன்னியப்பன் (இணை கடன்தாரர் 1) ஜெயப்பிரகாசம் G (இணை கடன்தாரர் 2) முத்துசாமி செந்தமிழ்செல்வி M (ஜாமீன்தாரர் 1) உமாராணி K (ஜாமீன்தாரர் 2) குடியரசு N S (ஜாமீன்தாரர் 3)	தேதி:06.05.2021, ரூ.6,22,66,014/-, (ரூபாய் ஆறு கோடியே இருபத்திரண்டு லட்சத்து அறுபத்தாறாயிரத்து பதினான்கு மட்டும்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளின் பரப்பளவு :- ச.எண்.142-2B1, 246-6, 7, 8, 9, 10, 11, 12, 15, 1 ஆக்கூர் முக்கூட்டு, காளஹஸ்தினாபுரம், முடிகண்டனல் நாகப்பட்டினம், தஞ்சாவூர், தமிழ்நாடு :- 609 309.	ரூ.13,19,84,000/- (ரூபாய் பதின்மூன்று கோடியே பத்தொன்பது லட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்)	ரூ.1,31,98,400/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தோரு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நானூறு மட்டும்)	ரூ.7,31,99,315/- (ரூபாய் ஏழு கோடியே முப்பத்தோரு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து முந்நூற்று பதினைந்து மட்டும்)

E -ஏல நாள்: 02.08.2024, முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரை (எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடங்கள் காலநீட்டிப்புடன்), ஏலப்புள்ளி தாக்கல் செய்யக் கடைசி நாள்: 01.08.2024, மாலை 4:00 மணிக்கு முன்பாக.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய, https://www.jmfinancialarc.com/Home/Assetsforsale அல்லது https://www.bankauctions.in ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும்.

சர்:.பாசி சட்டத்தின் கீழ் கடன்தாரருக்கான / ஜாமீன்தாரருக்கான / அடமானதாரருக்கான சட்டப்படியான 30 நாள் விற்பனை அறிவிப்பு

மேற்கூறிய கடன்தாரருக்கு / ஜாமீன்தாரருக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையை நாளது வரையிலான சேர்ந்துள்ள வட்டியுடன் ஏல நாளுக்குள் முழுமையாகச் செலுத்த வேண்டும். தவறினால் சொத்தானது ஏலமிடப்படுவதோடு / விற்கப்படுவதோடு மேலும் நிலுவைத் தொகைகள் எஞ்சியிருப்பின் அவையும் கடன்தாரரிடமிருந்து / ஜாமீன்தாரரிடமிருந்து வட்டி மற்றும் செலவினத்துடன் திரும்பப் பெறப்படும்.

நாள்: 26.06.2024
இடம்: சென்னை RPU

ஒம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்)
(ஆரண்யா - டிரஸ்ட்)

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

அறிவிப்பு – உடன் – சேர்க்கை – திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான அறிக்கை

அ) வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரி மாற்றம்:

முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் KFIN டெக்னாலஜீஸின் வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரியைக் குறித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ளது, இது சுந்தரம் பஸ்பர திட்டங்களுக்கான பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரப்பூர்வ மையமாகும்

தற்போதுள்ள முகவரி	புதிய முகவரி	நடைமுறைப்படுத்திய தேதி
KFIN டெக்னாலஜீஸ் லிமிடெட் D எண் :46–23–10/A, திருமலா ஆர்கேட், 2வது தளம், கனுகா தெரு, தனலாப்பேட்டா, ராஜமுந்திரி – 533 103. ஆந்திரப் பிரதேசம் தொடர்புக்கு: 0883–2442539	KFIN டெக்னாலஜீஸ் லிமிடெட், டி.எண் 6–7–7, ஸ்ரீ வெங்கட சத்திய நிலையம், 1ஸ்ட தளம், வத்லே வோ வீதி, டி – நகர், ராஜமுந்திரி – 533101 ஆந்திரப் பிரதேசம். தொடர்புக்கு: 0883–2442539	ஜூலை 1, 2024

திட்டத் தகவல் ஆவணம் (கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை (கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவலின் (SAI) அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த சேர்க்கை அமைகிறது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆஃபீசர்

இடம்: சென்னை
தேதி: ஜூன் 26, 2024

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஓல்டேஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), 044 4083 1500 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
ஃபேக்ஸ்: +91 44 2841 8108. www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

அறிவிப்பு – உடன் – சேர்க்கை – திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான அறிக்கை

நிர்வாகப் பணியாளர் மாற்றம்:

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் லிமிடெட் (Sundaram AMC) நிறுவனத்தின் முக்கியப் பணியாளர்கள் பின் தொடர்வதற்கான பொறுப்புகள் கீழ்க்கண்டவாறு நடைமுறைக்கு வரும்படி திருத்தப்பட்டுள்ளது.

1. திரு. சுனில் சுப்ரமணியம் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பதவியில் இருந்து w.e.f. ஜூன் 25, 2024 ("நடைமுறைப்படுத்திய தேதி") ஓய்வுபெறும் வயதை அடைதல் காரணமாக விலகியுள்ளார்.
2. திரு. ஆனந்த் ராதாகிருஷ்ணன், தலைமை நிர்வாக அதிகாரி, w.e.f. ஜூன் 25, 2024 ("நடைமுறைப்படுத்திய தேதி") –லிருந்து நிர்வாக இயக்குநராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

அதன்படி, அவர்களின் பதவி, 'முக்கிய பணியாளர்கள் மற்றிய தகவல்' பிரிவில் மேலே தோன்றும் சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் கூடுதல் தகவல் அறிக்கை ("SAI") இவ்வாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கிய தகவலின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவலின் அறிக்கை மாறாமல் இருக்கும்.

இந்தத் துணை நிரல் திட்டத் தகவல் ஆவணம் (SID) / விசையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். தகவல் குறிப்பு (KIM) / திட்டங்களின் கூடுதல் தகவல் (SAI) அறிக்கை சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் அவ்வப்போது திருத்தப்பட்டது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆஃபீசர்

இடம்: சென்னை
தேதி: ஜூன் 26, 2024

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் ட